TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

C 8318777 14/nc/2025/TVL

1. District : Thiruvallur PS: VIIDnc, Year: 2025 FIR No.: Date: 22.10.20
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 16.00

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act-2018. Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a) & 12 of the Prevention of Corrupt (Amendment) Act 201
(iii) Act சட்டம்: IPC. Sections பிரிவுகள்: and 406, 420 IPC
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : May/2018 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : September/2022 Time to
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 14.05.2025 Time : —
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time : 16.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.10.2025 at நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : on findings of the enquiry.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: West, 37 kms.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : Residence of A-1's at New Colony,
முறைக் காவல் எண் முகவரி Kanasamuthiram, Thiruvallur District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Mala (b) Father's/ Husband's Name : G. Senthilkumar
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 47 yrs (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Inspector of police, (g) Address : Vigilance and Anti corruption, Thiruvallur District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A-1. S. Thirunavukkarasu, Office Assistant, Pallipattu Taluk Office Thiruvallur Dt.
A-2. N. Pitchandi s/o Narayanasamy, No. 4/432, Lakshmi Narayana Koil street, Ammaiyakkulam, R.K.pet Taluk, Thiruvallur Dt.,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Conducted enquiry vide petition No. 4752/2025/PER TVL

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

NIL

10 Total value of properties stolen / involved : NIL
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: NIL
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பரிந்தாரிப்பகுதி :- திருவள்ளூர் மாவட்டம், R.K. பேட்டை வட்டம் அம்மையார்குப்பம் கிராமம், பஸ் எ/438, L.N. கோயில் தெரு, தெ.பி.சாண்டி த/பெ. நாராயணசாமி என்பவர் திருவள்ளூர் மாவட்ட மாட்சியர் அவர்களிடம் கொடுத்திருந்த புகாரின் அடிப்படையில், கலெக்டர், மாவட்ட குப்பு மன்றம் கண்காணிப்பு கலெக்டரகம் சென்னை அவர்களின் petition No. 4752/2025/REV/TVL, Dated : 07.05.2025. ன் படி கொடுக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் கண்டுகொள்ளப்பட்ட விசாரணையில் பெரும் பிரிவு

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.10.2025 at 09.00 hrs.

Name: பெயர் S. Mala,
Rank: நிலை Inspector No. எண் ..... police,
Vadamadurai, Thiruvallur.

Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.14/AC/2025/TVL, U/s 7(A) & 8 of the Prevention of Corruption (Amendment) Act 2018 and 406, 420 IPC continues)

பணிந்து அனுப்பப்படுகிறது

இவ்வழக்கின் எதிரி-1 S.திருநாவுக்கரசு, அலுவலக உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், பள்ளிப்பட்டு தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் ஊழல் தடுப்பு சட்டம் 2018 ன் சட்டப்பிரிவு 2(c) ன் படி அரசு ஊழியர் ஆவார். எதிரி-2 N.பிச்சாண்டி, த/பெ.நாராயணசாமி, எண்.2/432, லட்சுமி நாராயணன் கோயில் தெரு, அம்மையார் குப்பம், ஆர்.கே.பேட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் தனி நபர் ஆவார். எதிரி-2 N.பிச்சாண்டி, த/பெ.நாராயணசாமி, என்பவர் கடந்த 2017-ம் வருடம் அவருடைய தந்தை திரு.நாராயணசாமி அவர்களின் இறப்பு சான்றிதழ் பெறுவதற்காக பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்றபோது அந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக வேலை பார்த்த எதிரி-1 S.திருநாவுக்கரசு, த/பெ.சங்கர் என்பவர் அறிமுகமாகியுள்ளார். அதன்பின்னர் இருவரும் தொடர்ந்து பேசி வந்துள்ளார்கள். எதிரி-2 N.பிச்சாண்டி அவர்களுடைய குடும்ப விபரங்களை தெரிந்து கொண்ட எதிரி-1 S.திருநாவுக்கரசு அவர்கள், 2019 வருடம் மே மாதத்தில், எதிரி-2 N.பிச்சாண்டி என்பவரிடம், அவருடைய மகள் ஜெயந்திக்கு, திருத்தணியில் தேர்தல் நடத்தும் பணியில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்த திரு.பாலாஜி அவர்கள் மூலமாக சத்துணவுத்துறையில் வேலை வாங்கித்தருவதாகவும், அதற்கு 2 லட்சம் கொடுத்தால் வேலை வாங்கி தந்துவிடுவதாக நம்பிக்கை வார்த்தைகளை கூறியுள்ளார். அதன்படி எதிரி-2 N.பிச்சாண்டி, லஞ்சமாக பணம் கொடுத்து தன்னுடைய மகள் ஜெயந்திக்கு சத்துணவுதுறையில் அரசு வேலை வாங்க முடிவு செய்து, 2019-ம் வருடம் மே மாதத்தில் ஒரு நாள் ரூ.2 லட்சம் பணத்தை கோணசமுத்திரம், புது காலனியில் உள்ள எதிரி-1 S.திருநாவுக்கரசு அவர்களின் வீட்டில் வைத்து ரொக்கமாக அவரிடம் கொடுத்துள்ளார். பணத்தை பெற்றுக்கொண்ட எதிரி-1 திருநாவுக்கரசு ஒரே மாதத்தில் வேலை வாங்கி தந்துவிடுவதாகவும், மேலும் ரூ.1,50,000/-ம் கொடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். எனவே எதிரி-2 N.பிச்சாண்டி, அந்த வாரமே ரூ.1,50,000/- பணத்தை எதிரி-1 S.திருநாவுக்கரசின் வீட்டில் வைத்து அவரிடம் கொடுத்துள்ளார். ஆனால் எதிரி-1 S.திருநாவுக்கரசு சொன்னதுபோல் வேலை வாங்கி தரவில்லை. இது தொடர்பாக எதிரி-1 திருநாவுக்கரசிடம், எதிரி-2 N.பிச்சாண்டி பலமுறை கேட்கும்போதெல்லாம் வேலை கிடைத்துவிடும் என அவர் கூறி வந்துள்ளார். சுமார் மூன்று வருடங்கள் முடிந்த நிலையில் எதிரி-1 திருநாவுக்கரசிடம், எதிரி-2 N.பிச்சாண்டி பணத்தை திரும்ப கேட்டபோது, பணத்தை துணை வட்டாட்சியர் திரு-பாலாஜி அவர்களிடம் கொடுத்து விட்டதாகவும், எனவே பணத்தை திருப்பி வாங்க முடியாது என்றும், வேலைதான் வாங்க முடியும் என்று கூறியுள்ளார். மேலும் மகளுக்கான

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.14/AC/2025/TVL, U/s 7 & 8 of the Prevention of Corruption (Amendment) Act 2018 and 406, 420 I.P.C. continues)

வேலையை பிறகு பார்த்து கொள்ளலாம் என்றும், எதிரி-2 **N.**பிச்சாண்டியின் மகன் தமிழ்மணியை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேலைக்கு வருமாறு சொல்லியுள்ளார். அதன்படி எதிரி-2 **N.**பிச்சாண்டியின் மகன் தமிழ்மணி 2022-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில், மேற்க்கொள்ளப்பட்ட பிறப்பு, இறப்பு தொடர்பான பதிவேட்டின் விபரங்களை கணினியில் அப்டேட் செய்யும் ஒப்பந்த வேலைக்கு சென்று வந்துள்ளார். அதன் பின்னர் சுமார் ஆறு மாதங்கள் கழித்து எதிரி-1 திருநாவுக்கரசு, எதிரி-2 **N.**பிச்சாண்டியிடம், அவருடைய மகனுடைய பணியினை நிரந்தரம் செய்து கொடுக்க மேலும் ரூ.9,50,000/- பணம் கொடுக்க வேண்டும் என்றும், இந்த பணத்தினை கொடுக்கவில்லை என்றால் ஏற்கனவே கொடுத்த பணத்தினை திருப்பி வாங்க முடியாது என்றும், வேலை சம்மந்தமாக கேட்க கூடாது என்றும் தெரிவித்துள்ளார். எதிரி-2 **N.**பிச்சாண்டி தன்னிடம் பணம் இல்லை என்று கூறிய போது, எதிரி-1 திருநாவுக்கரசு, எதிரி-2 **N.**பிச்சாண்டியிடம், வங்கியில் லோன் பெற்று தர அவர் ஏற்பாடு செய்வதாகவும், லோன் போட்டு அவர் கேட்ட பணம், ரூ.9,50,000/-த்தை கொடுத்தால் நிரந்தர வேலைக்கான உத்தரவு கிடைத்துவிடும் என்று கூறியுள்ளார். அதன்படி அம்மையார் குப்பத்தில் உள்ள இந்தியன் வங்கியில் **PMEGP** என்ற திட்டத்தின்படி எதிரி-2 திரு.**N.**பிச்சாண்டியின் மகன் தமிழ்மணியின் பெயரில், லோன் பெறுவதற்காக கடந்த 2022-ம் வருடம் செப்டம்பர் மாதம் விண்ணப்பம் செய்து, அதன்படி லோன் தொகை ரூ.9,50,000/-ம் வங்கி மூலமாக கர்நாடகா மாநிலம், பெங்களூரில் உள்ள மஞ்சுநாதன் பவர்லூம்ஸ் கம்பெனிக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. அந்த கம்பெனியில் இருந்து 4 விசைத்தறி இயந்திரங்கள் எதிரி-2 **N.**பிச்சாண்டியின் மகன் தமிழ்மணிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எதிரி-2 **N.**பிச்சாண்டி புதியதாக வாங்கிய 4 விசைத்தறி இயந்திரங்களையும், அதே தொகைக்கு விற்பனை செய்து, அந்த பணம் ரூ.9,50,000/-த்தை எதிரி-1 திருநாவுக்கரசு அவர்களிடம் அவருடைய வீட்டில் வைத்து கொடுத்துவிட்டு தன்னுடைய மகனின் வேலைக்கான உத்தரவை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். எதிரி-1 திருநாவுக்கரசு, எதிரி-2 **N.**பிச்சாண்டியிடமிருந்து பணம் ரூ.13,00,000/- பெற்றுக்கொண்டு சொன்னப்படி வேலை வாங்கி கொடுக்காமலும், பணத்தை திருப்பி கொடுக்காமலும் ஏமாற்றி வந்ததால், எதிரி-2 திரு.**N.**பிச்சாண்டி, 29.09.2023-ம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் கொடுத்துள்ளார். அந்த புகார்மனு சம்மந்தமாக பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தில் விசாரணை செய்தபோது, எதிரி-1 திருநாவுக்கரசு ரூ.1,50,000/-ம் மட்டும் திருப்பி கொடுத்துள்ளார். மீதம் பணம் ரூ.11,50,000/- இதுநாள் வரை திருப்பிகொடுக்காமல் ஏமாற்றி வருகிறார். எதிரி-1 திருநாவுக்கரசு அவர்கள், எதிரி-2 திரு.**N.**பிச்சாண்டி அவர்களின் மகள் ஜெயந்தி மற்றும் மகன் தமிழ்மணிக்கு அரசு

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.14/AC/2025/TVL, U/s 7(A) & 8 of the Prevention of Corruption (Amendment) Act 2018 and 406, 420 IPC continues)

வேலை வாங்கி தருவதாக சொல்லி அவருடைய சுய லாபத்திற்காக ரூபாய்.13,00,000/- லஞ்சமாக எதிரி-2 திரு.N.பிச்சாண்டி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, காவல்துறை விசாரணையின் போது ரூ.1,50,000/- மட்டும் திருப்பி கொடுத்துவிட்டு மீதம் பணம் ரூ.11,50,000/ - திருப்பி கொடுக்காமலும், சொன்னபடி வேலை வாங்கி தராமல் ஏமாற்றியதும் குற்றமாகும். எனவே எதிரி-1 திருநாவுக்கரசு என்பவர் சட்டப்பிரிவு 7(A) of the Prevention of Corruption (Amendment) Act 2018 and 406, 420 IPC ன் படியும், எதிரி-2 N.பிச்சாண்டி என்பவர் லஞ்சமாக பணம் கொடுத்து தன்னுடைய மகள் மற்றும் மகனுக்கு அரசு வேலை பெறுவது குற்றம் என்றும் தெரிந்தும், எப்படியாவது அரசு பணியை தனது மகள் மற்றும் மகனுக்கு வாங்கிவிட வேண்டும் என்ற தவறான எண்ணத்தில், தான் கொடுக்கும் பணம் லஞ்ச பணம் என தெரிந்தே எதிரி-1 திருநாவுக்கரசு அவர்களிடம் மூன்று தவணைகளாக ரூ.13,00,000/- கொடுத்தது சட்டப்பிரிவு 8 of the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படியும் குற்றமாகும். மேலும் எதிரி-2 N.பிச்சாண்டி என்பவர், சட்டப்பிரிவு 8 of the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படி லஞ்சமாக எதிரி-1 திருநாவுக்கரசு அவர்களிடம் பணம் கொடுத்தது குறித்த 7 நாட்களுக்குள் புகார் அளிக்காததால், மேற்படி சட்டப்பிரிவின் படி குற்றம் புரிந்தவராகிறார்.

Honoured Madam,

இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் சென்னை அவர்களின் **Petition No.4758/2025/REV/TVL, Dated: 15.09.2025**-ல் கொடுக்கப்பட்ட உத்தரவின்படி இன்று 22.10.2025-ம் தேதி 16.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவின் குற்ற எண்.14/2025, **U/s 7(A) & 8 of the Prevention of Corruption (Amendment) Act 2018 and 406, 420 IPC**-ன் படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, திருவள்ளூர் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், வடக்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கும், ஒரு நகல் வழக்கு கோப்பிலும் வைக்கப்பட்டது.

S. Mala 22/10/2025

(S.MALA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.